

# நவம்பர் 3, 2016 தமிழ்மன்றப் பாராட்டு விழா

சான் பிரான்சிஸ்கோ வளைகுடாப்பகுதித் தமிழ்மன்றத்தின் தலைவர் திரு. குணசேகரன் பதக்கம் அவர்களுக்கு விடுமுறையில் தன் குடும்பத்துடன் இந்தியா செல்லும் பயணம் அது.

அதேநேரம், சென்னையில் நவம்பர் 3 ஆம் தேதி அன்று அரசுசாரா சேவை நிறுவனங்களுக்கு சான் பிரான்சிஸ்கோ வளைகுடாப்பகுதித் தமிழ்மன்றம் வழங்கும் பாராட்டு விழாவும் நடைபெறவிருந்தது. அந்தச் சேவை நிறுவனங்கள் வெள்ளமீட்புப் பணியில் தமிழ்மன்றத்துடன் தோளோடு தோள் இணைந்து செயலாற்றியவர்கள்.

தமிழ் நாட்டையே ஒரு உலுக்கு உலுக்கிய 2015-2016 மழை வெள்ளத்தைப் பற்றி அறியாதவர்கள் இருக்கமுடியாது. அந்த வெள்ளம் கருணை உள்ளங்களை ஒன்றாக இணைத்தது. சான் பிரான்சிஸ்கோ வளைகுடாப் பகுதித் தமிழ் மன்றமும் "வெள்ளத்தால் இணைந்தோம்! உள்ளத்தால் உயர்ந்தோம்!" என்று தமிழ்நாட்டுக்குக் கைக்கொடுத்தது.

இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வாழும் நல்லுள்ளங்கள் சான் பிரான்சிஸ்கோ வளைகுடாத் தமிழ் மன்றத்தின் மேல் நம்பிக்கைக் கொண்டு, பெருவாரியான நன்கொடை அளித்து உதவினார்கள். தமிழ்மன்றம் அந்தப் பணத்தை வெள்ள மீட்பு/சீரமைப்புத் திட்டங்களுக்குக் கொடுத்து, கீழ்க்கண்ட பதிமூன்று அரசுசாரா சேவை நிறுவனங்களுடன் இணைந்து சீரமைப்புப் பணிகளை செவ்வனே செய்து வருகிறது:

1. *Boomika* - வெள்ள மீட்பு/சீரமைப்புப் பணிகள்
2. *Aishwaryam* - சீரமைப்புப் பணிகள்
3. *5th Pillar* - சீரமைப்புப் பணிகள்
4. *Falcon Foundation* - சீரமைப்புப் பணிகள்
5. *Indian Literacy Project* பள்ளிகள், அங்கன்வாடி - சீரமைப்புப் பணிகள்
6. *India Team* - பள்ளிச் சீரமைப்பு
7. *Children's Watch* - சீரமைப்புப் பணிகள்
8. *National Agro Foundation*- ஏரிகள் நீராதாரம் பெருக்குதல், சீரமைப்புப் பணிகள்
9. *Hindu Mission Hospital* - முதலுதவி மருத்துவ ஊர்தி
10. *We Reach Out*- சீரமைப்புப் பணிகள்
11. *Abdul Kalam Vision India Movement* - தூய குடிநீர் வழங்குதல்
12. *Aid India* - கட்டிடத் தொகை உதவி
13. *United Way* - வீடு கட்டிக் கொடுக்க உதவி

தமிழ்நாட்டின் இந்த அரசுசாரா நல்லுள்ளங்களுக்காகப் பதிமூன்று பதக்கங்களையும் தன்னோடு சுமந்து சென்று கொண்டிருந்தார், திரு. குணசேகரன் பதக்கம். விமானத்தில் ஏறி அமரும் வரை விழா ஏற்பாடுகள் பற்றியே தொலைபேசியில் பேசிக்கொண்டு இருந்தார். விமானப் பயணம் முழுதும் விழாவைப் பற்றிய எண்ணம்தான் அவருக்குள் ஓடிக் கொண்டிருந்தது.

நவம்பர் 3 -ஆம் தேதி மாலை 3 மணி அளவில் இந்து மிஷன் ஹாஸ்பிடல் வள்ளுவர் குருகுலம் பள்ளி அரங்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. பத்மஸ்ரீ திரு. D.K. ஸ்ரீனிவாசன் சிறப்புரை ஆற்றி, அனைவருக்கும் நல்லாசி வழங்கினார்.

வளைகுடாபகுதிவாழ் தமிழரும், சென்னையைச் சேர்ந்தவருமான திரு.ரஞ்சித், திரு. குணசேகரன் பதக்கம் அவர்களை அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

திரு. குணசேகரன் பதக்கம் அவர்கள் வந்திருந்த அனைத்து அருளுள்ளங்களையும் உவகையோடு வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் 100-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பண உதவி கேட்டு

வந்ததாகவும், பல சேவை நிறுவனங்களுக்கு எஃப்.சி.ஆர்.ஏ தகுதி இல்லாததால் கொடுக்க முடியாமல் போனதாகவும் கூறினார்.

விழாவின் போது, சான் பிரான்சிஸ்கோ வளைகுடாப் பகுதி தமிழ் மன்றம் பற்றியும், திரட்டிய நன்கொடை கொண்டு இந்தப் பதிமூன்று தொண்டு அமைப்புகளுடன் இணைந்து செயல்படுத்திய திட்டங்கள் பற்றியும் அமைந்ததான ஒரு காணொளிக் காட்சி ஒளிபரப்பப்பட்டது.

திரு. குணசேகரன் பதக்கம், அகர வரிசையில் அரசுசாரா அமைப்புகளை அழைத்து, அவர்கள் செய்த சேவைகளை பற்றிக் கூறி, பதக்கத்தை அளித்துப் பாராட்டினார். ஒவ்வொரு அமைப்பும் தாங்கள் தமிழ் மன்றத்துடன் இணைந்து செயலாற்றியதைப் பற்றிப் பகிர்த்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியை சிறப்பாக நடத்த உதவிய பள்ளி அமைப்பு, திரு. சேகர் ராமசாமி, திருமதி. மஹேஸ்வரி சேகர், திரு. ரஞ்சித் மற்றும் நண்பர்கள் அனைவரையும் சான் பிரான்சிஸ்கோ வளைகுடாபகுதித் தமிழ்மன்றம் நன்றியுடன் பாராட்டியது.